அவர்கள் தலைமையிலான அம்மாவினுடைய அரசு கண்டிப்பாக நடத்தத் தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) பொள்ளாச்சி, வால்பாறை மற்றும் கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதிகள் மற்றும் ஆழியாறு–மணக்கடவு வரை கூடுதல் தடுப்பணைகள் கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.*

***முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்):** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'முடிந்தவரை முயற்சிப்பதல்ல முயற்சி; எடுத்ததை முடிக்கும் வரை முயற்சிப்பதே முயற்சி'. இதற்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர், நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். திட்டமிட்டு உழைக்கும்போது, திசைகள் தோறும் வெற்றி. எட்டாதது உலகில் எதுவும் இல்லை, இதை உணர்த்துவதே முயற்சியின் வெற்றி என்று செயல்பட்டுக் கொண்டிருப்பவர் நம்முடைய துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்கள். இவர்கள் இரண்டு பேருக்கும் என்னுடைய பணிவான வணக்கங்களை உரித்தாக்கிக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–55

பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, கிணத்துக்கடவு, வால்பாறை ஆகிய நான்கு சட்டமன்றத் தொகுதிகளும், மழைநீர் பொழியும்போது மேற்கு நோக்கி ஓடுகின்ற தண்ணீர் பாதையைப் பெற்றிருக்கிற பீடபூமி; மேடு பள்ளமான பகுதிகள். இந்தப் பகுதிகளில் வால்பாறை தொகுதியில் வாகரையாறு, உப்பாறு, பொள்ளாச்சியில் கோதையாறு, குள்ளி செட்டிப்பாளையம் ஆறு, செல்லப்பம்பாளையம் ஆறு, கிணத்துக்கடவில் வரட்டாறு, பாலாறு ஆகிய ஆறுகள் ஓடுகின்றன. புலிப்பாறை அணை என்கின்ற ஒரு சிறு திட்டம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் தொடங்கப்பட்டு, நிறுத்தப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஆறுகளோடு பாப்பாத்தி பள்ளம், புங்கன்கடவு பள்ளம், பாவரைப் பள்ளம், கொளத்துப் பள்ளம், தூணக்கடவு பள்ளம், வாகரையாறு பள்ளம், மைலம்பாறைப் பள்ளம் போன்ற பள்ளப் பகுதிகளிலும்

தேவையான இடங்களில் தடுப்பணைகள் கட்டி, பெய்கின்ற மழை நீரில், ஒரு சொட்டு நீர்கூட கேரள மாநிலத்திற்குச் சென்று, அரபிக் கடலில் கலக்காத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சென்ற ஆண்டு மட்டும், பரம்பிக்குளம் அணை, சோலையாறு அணை, ஆழியாறு அணைப் பகுதிகளில் பெய்த மழையில் 50 T.M.C. நீர் வீணாகச் சென்று அரபிக் கடலில் கலந்திருக்கிறது. இதனைத் தடுக்கின்ற வகையில், இந்த நான்கு சட்டமன்றத் தொகுதிகளிலும் மேற்கு நோக்கி ஓடும் ஆறுகளிலேயும், சிறு சிறு பள்ளங்களிலேயும், எங்கெங்கெல்லாம் தடுப்பணைகள் தேவையோ, அங்கெங்கெல்லாம் தடுப்பணைகளைக் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பரம்பிக்குளம்—ஆழியாறு திட்டத்தில் நிலுவையில் இருக்கிற ஆனைமலையாறு—நல்லாறு திட்டத்தை நிறைவேற்றுவதற்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உயர்மட்டக் குழுவை அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக, அவர்களுக்கு எங்களுடைய 4 இலட்சம் ஏக்கர் பாசன விவசாயிகள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வரும் ஆண்டில், கேரள மாநில அரசாங்கத்தோடு பேசி, ஆனைமலையாறு—நல்லாறு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

அதேபோல, பரம்பிக்குளம்—ஆழியாறு திட்டம் அமைவதற்குக் காரணமாக இருந்த திரு. வி.கே. பழனிசாமி கவுண்டர் அவர்களுக்கு நினைவு இல்லம் அமைப்பதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள். அந்த நினைவு இல்லத்தை வேட்டைக்காரன்புதூர், பரம்பிக்குளம்—ஆழியாறு செயற் பொறியாளர் அலுவலகத்தில் அமைத்துக் கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மழை நீர் மக்களின் உயிர் நீர். எனவே, அந்த மழை நீர் மேற்கு நோக்கி ஓடி, அரபிக் கடலில் வீணாகக் கலக்காமல், பொள்ளாச்சி சுற்று வட்டாரப் பகுதி பாசன விவசாயப் பெருங்குடி மக்கள், வேளாண் பெருங்குடி மக்கள் பயன்பெறத் தக்க வகையில், தேவையான இடங்களில், சிறப்புக் கவனம் செலுத்தி, சிறு சிறு தடுப்பணைகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், கேரளாவிற்குச் செல்கிற ஆழியாறிலே, தேவையான இடங்களில் சிறு, சிறு தடுப்பணைகளைக் கட்டினால், 2 T.M.C. அளவிற்குத் தண்ணீரைத் தேக்கி, கேரள மாநிலத்திற்குத் தேவையானபோது, விடுவதற்கான வாய்ப்பு இருப்பதாகவும்,

நிபுணர்கள் சொல்கிறார்கள். எனவே, ஆழியாறிலும், மணக்கடவிலே தொடங்கி ஆழியாறு அணை வரை—அந்த ஆறு ஒரு perennial river; *எப்பொழுதும் வற்றாத ஜீவ நதியாக ஓடிக்கொண்டிருக்கின்ற அந்த ஆற்றின் குறுக்கே, ஆங்காங்கே தடுப்பணை கட்டி மழை நீரைச் சேகரித்து, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காலத்திலே கொங்கு மண்டல விவசாயிகளுக்கு ஒரு பொற்காலமாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அத்திக்கடவு–அவினாசி திட்டத்தை எவ்வாறு நிறைவேற்றி நீங்கள் வரலாற்றில் இடம்பிடித்தீர்களோ, அதைப்போல, ஆனைமலையாறு–நல்லாறு திட்டத்தையும் நிறைவேற்றி, ஆழியாறிலே தடுப்பணைகளைக் கட்டி, பொற்கால மன்னராக நீங்கள் விளங்க வேண்டுமென்று வேண்டுகோள் வைத்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதி, வால்பாறை சட்டமன்றத் தொகுதி மற்றும் கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதிகளில், பரம்பிக்குளம்–ஆழியாறு திட்ட நீர்ப்பிடிப்புப் பகுதிகளில், கூடுதலாகப் பெய்யும் மழை நீர், கடலில் கலப்பதைத் தடுக்கும்விதமாக, மழை நீரைச் சேமித்துப் பயன்படுத்தும் வகையில், மேலும் கூடுதலாக தடுப்பணைகள் கட்டுதல் குறித்தான கருத்துருவுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, பரிசீலனையில் உள்ளன. மேலும், ஆழியாறு ஆற்றில் மணக்கடவு வரை மூன்று இடங்களில் தடுப்பணைகளைக் கட்டி, (மேசையைத் தட்டும் ஒலி) நீரைத் தேக்குவது தொடர்பான கருத்துருக்கள் கேரள மாநில அரசோடு பேசி, ஒப்புதல் பெற்றவுடன், மேல் நடவடிக்கைகள் தொடரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(ஈ) வெள்ளையாறு சீரமைப்பினையொட்டி மன்னார்குடி தொகுதி, ஆயக்குடி கிராமம், அராபத் தெருவிலுள்ளவர்களை மறுகுடியமர்வு செய்தல் மற்றும் பாலம் கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.*